Shrimad Rajchandra Mission
Dharampur

VIACOM 18

**வயாகாம் 18, நேஷனல் தொலைக்காட்சியில் வழங்கும் - மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியிலிருந்து மஹாத்மாவாக உருவான வரலாற்றுப் பயணத்தை மையமாக கொண்ட சினிமா-நாடகம் "யுகபுருஷ்".**

"யுகபுருஷ்" நவம்பர் 10, காலை 9 மணிக்கு COLORS தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்படுவதோடு மற்ற 6 மொழிகளில் அதன் நெட்வொர்க்கில் உள்ள பிற பிராந்திய தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பு செய்யப்பட உள்ளது.

"யுகபுருஷ்" என்ற திரைகாவியம்...

நேஷனல், நவம்பர் 7, 2019; விருதுபெற்ற நாடகமான யுகபுருஷ், நவம்பர் 10 ஞாயிறு-அன்று காலை 9 மணிக்கு COLORS தொலைக்காட்சி, COLORS Marathi, COLORS Gujarati, COLORS Bangla, COLORS Tamil, COLORS Super, COLORS Odia, COLORS Infinity மற்றும் MTV ஆகியவற்றில் இவ்வாண்டு கொண்டாடப்படவேண்டிய காந்தியடிகளின் காலத்தால் அழியாத தத்துவங்களை வயாகாம் 18 வழங்குகிறது. மேலும் இந்நிகழ்ச்சி VOOT-ல் நவம்பர் 10-அன்று நாள் முழுவதும் காண கிடைக்கும்.

தொலைக்காட்சி ஒளிபரப்பிற்கு ஏற்றவாறு இந்த நாடகம் சினிமா-பாணியில் படமாக்கப்பட்டு அசலான வசனங்களோடு 7 மொழிகளில் அந்தந்த மொழிகளில் நடித்த கலைஞர்களோடு ஒளிபரப்பப்படவுள்ளது.

இந்த நாடகத்தைப் பற்றி குறிப்பிடுகையில், **சுதான்சு வாட்ஸ்,** குழும CEO மற்றும் MD, வயாகாம் 18, தெரிவிப்பது "ஒரு மீடியா மற்றும் பொழுதுபோக்கு நெட்வொர்க் என்ற முறையில் எங்களது பணி ஒவ்வொரு சிறந்த கதையையும் பார்வையாளர்களுக்கு எடுத்துச் செல்வதும் மற்றும் ஒவ்வொரு பார்வையாளரையும் பொருத்தமான ஒரு கதையோடு இணைப்பதும்தான். அந்த வகையில் இந்தியாவில் உள்ள அனைவருக்கும் சொல்ல வேண்டிய உன்னதமான கதை இது. மேலும் இது இந்தியாவில் தற்போதுள்ள இளைஞர்கள் அனைவருக்கும் சொல்ல வேண்டிய கதை. காந்தியடிகள் தனது கொள்கைகள் மூலம் உலகெங்கிலுமுள்ள பல தலைமுறை மக்களை ஊக்குவித்ததை "யுகபுருஷ்" மூலம் அவர் இளம் பாரிஸ்டரிலிருந்து மஹாத்மாவாக உருமாறிய வரலாற்றை மக்களுக்கு வழங்குகிறோம்".

திரு. அபய் ஜசானி, தலைவர், ஸ்ரீமத் ராஜ்சந்திரா மிஷன் தரம்பூர் கூறுவது வயாகாம் 18 பற்றி

வயாகாம் 18 மீடியா பிரைவேட் லிமிடேட் இது இந்தியாவில் அதிவேகமாக வளர்ந்து வரும் பொழுதுபோக்கு நிறுவனங்களில் ஒன்று. இந்நிறுவனம் பல தளங்களில் இயங்கும் பல தலைமுறையினருக்கும் மற்றும் பலதரப்பட்ட கலாச்சாரத்திற்கும் மகிழ்வூட்டும் அனுபவங்களை அளிக்கும் ஓர் நிறுவனமாகும். இந்நிறுவனம் TV18 என்ற நிறுவனத்துடன் இணைந்து TV 18 51%, பங்குதாரர் வயாகாம் 49% என்ற ஒப்பந்தத்தோடு செயல்படுகிறது. வயாகாம் 18 ஒளிபரப்பு ஆன்லைன் தரைவழி கடைகள் மற்றும் சினிமா ஆகிய பல்வேறு தளங்களில் இயங்கி இந்திய மக்களின் பொழுதுபோக்கை தீர்மானிக்கும் சக்தியாக திகழ்கிறது.

Shrimad Rajchandra Mission Dharampur பற்றி

ஸ்ரீமத்ராஜ்சந்திரா மிஷன் தரம்பூர் என்பது உலகளாவிய ஓர் ஆன்மிக இயக்கம். இவ்வியக்கம் ஆன்மீக நாட்டம் கொண்டோரது நோக்கத்தை மேம்படுத்துவும் அதன் மூலம் சமூக நலனை உயர்த்தும் உன்னதமான நோக்கத்தோடு செயல்பட்டு வருகிறது. தரம்பூரை உலக தலைமையகமாக கொண்டு செயல்படும் ஸ்ரீமத் ராஜ்சந்திரா மிஷனுக்கு உலகெங்கிலும் 108 மையங்கள் உள்ளது.

ஒருவரின் சுயத்தை அறியச் செய்வதும் மற்றும் தன்னலமற்ற சேவையை வழங்குவதும் என்ற உயரிய குறிக்கோளை மையமாக வைத்து இயங்கும் ஸ்ரீமத் ராஜ்சந்திரா மிஷன் தரம்பூர், உலக மக்களின் வாழ்வை மேம்படுத்தும் நோக்கத்தோடு செயல்பட்டு வருகிறது.

மேலும் தகவல்களுக்கு விஜயம் செய்யவும் www.srmd.org/yugpurush-national-premiere

For Press Enquiries call: +91 8369467223 / +91 9920304047 / +91 9820042864 or Email: publicrelations@srmd.org